<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : CC.No. 346/2018</u>

<u>வழக்கு சாட்சி PW–5</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரிய இக்னேஷியஸ் ராயன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மெர்லின் ஜோசப் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | சென்னை | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Monday of 10.08.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது சென்னை விமானநிலையம் குடியுரிமை பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 25.05.2018ம் தேதி 16.00 மணிக்கு தலைமைக்காவலர் அந்தோணிபாஸ்கர் என்பவர் கொடுத்த புகார் மனுவை சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயசங்கர் என்பவர் பெற்று, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.346/2018, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 353, 506(2) இதச வின் படி முதல்தகவல்அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல்தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.

அந்த வழக்கினை 25.05.2018 அன்று என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதே தேதி 17.45 மணியளவில் வழக்கின் சம்பவயிடம்

சென்று சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்னர், சாட்சிகள் தலைமைக்காவலர் அந்தோணிபாஸ்கர், ஹரிகிருஷ்ணன், பிரதீபன், கார்த்திகேயன், தங்கராஜ் மற்றும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயசங்கர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர், எதிரிகளை அதே தேதியில் வழக்கின் எதிரிகளை பாவூர்சத்திரம் காமராஜ் நகர் புதிய மார்க்கெட் அருகே வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர், அதே தேதி, இரவு 07.30 மணிக்கு காயம்பட்ட அந்தோணிபாஸ்கர் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்.மணிகண்டன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

லாரியில் எதிரிகள் வரும்போது, பிரச்சனை ஏற்பட்டதாக வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த லாரியை இந்த வழக்கில் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மருத்துவர் சான்றிதழ் 07.06.2018 அன்று வழங்கியதாக தேதி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பாவூர்சத்திரம் காவல்நிலையம் சம்பவயிடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து ஆலங்குளம் செல்ல வேண்டும் என்றால் எங்கள் காவல்நிலையம் தாண்டி செல்ல வேண்டும் என்றால் சரிதான். அ.சா.1 டம் என்னுடைய தொலைபேசி எண் இருந்திருக்கும் என்றால் சரிதான்.

எங்கள் காவல்நிலைய பொதுநாட்குறிப்பில் சம்பவ நாள் யார், யாருக்கு என்னென்ன பணிகள் ஒதுக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான்.

பொதுநாட்குறிப்பை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் பாக்கெட் டைரியை நான் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எங்கள் காவல்நிலையத்தில் பணி செய்தபோது, 1ம் எதிரியிடம் மாமூல் கேட்டார் என்றாலும், அவர் தர மறுத்ததினால் அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிரி சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், அ.சா.1 ,1வது எதிரியிடம் 2ம் எதிரியிடம் பணம் வாங்கித்தர சொன்னதாகவும், 2ம் எதிரி பணம் தர மறுத்ததினால் 2ம் எதிரி மீதும்பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிரி ஆலங்குளம் துணை காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல. விசாரணைக்கு வந்திருந்த எதிரிகளை பொய் வழக்கு போட்டு கைது செய்தோம் என்றால் சரியல்ல.

நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரிடம் இருந்து புகார் மனு எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு காவல்நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சி சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலக காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Tmt. Jamunarani, W.S.S.I. சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் 1ம்எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date:
2026.08.12
12:42:56 +0530